# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

6 37



22—3—70 அன்று புதுக்கோட்டையில் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இந்திய நடுவரசு உள்துறை அமைச்சர் மாண்புமிகு சாவன் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்தார்கள். உடன், மாணபுமிகு கே. வி. சுப்பையா அவர்கள்,

விலை 20

29-3-70

# மின் கட்டணப் போராட்டம்?

—ந. சேதுநாதன்

இந்தக் கிழமை கோவை மாவட்டத்தில் விவசாய மக்களின் பேரால் ஒரு போராட்டத்தை, முன்னாள் அமைச்சர் ஒருவரது முன்னிலையில் காங்கிரசுக் கட்சி நடத்தி முடித்து விட்டது.

சிலதவறான, அடிப்படையற்ற செய்திகளின் அடிப்படையிலும், திரித்துக் கூறப்பட்ட முறையிலும்தான் அந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. அமைச்சர் பதவியில் இருந்தவருக்குக்கூட இதுதான் நிலையென்றால், பொதுமக்கள் என்ன நினைக்கமாட்டார்கள்!

எனவேதான் மின் கட்டணம் பற்றிய சில விஷயங்களை இங்கே எடுத்துக் காட்டுவது நமது கடமையாகிறது.

1—1—57-ல் தமிழக மின்சார போர்டு அமைக்கப்பட்ட போது 1—1—40-ல் இருந்த யூனிட் விலையை அடிப்படையாகக் கொண்டு அதனையே 30—9—59 வரை அமுலில் இருத்தியது அப்போதைய அரசு. அதன் பின்னர் மூன்று முறை மின்சாரக் கட்டணம் திருத்தப்பட்டுள்ளது.

1965—ல் அரசாங்கத்துக்குச் சமர்ப்பணம் செய்த வெங்கட்ராமன் கமிட்டியின் அறிக்கை ஒரு யூனிட தயார் செய்து, அதனை வெகுதொலைவான இடங்களுக்குக் கொண்டு செல்வதால் ஏற்படும் மொத்தச் செலவையும், மின்சாரபோர்டு ஒவ்வொரு வருடமும் தன்மூலதனத்தில் தேய்மானத்திற்கு (Depreciation] ஒதுக்கும் தொகை முதலியவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இவைகளுக்கு ஈடுகட்டுகிற விலையையே ஒரு யூனிட்டுக்கு விதிக்க வேண்டும எனக் கூறியது.

நமக்கு ஒரு யூனிட்டுக்கு ஆகும் மொத்தச் செலவு 16 பைசாவாகும். ஆனால் இதனை இத்தனை நாளும் 8¼ பைசாவுக்குக் கொடுத்து வந்துள்ளோம் விவசாயிகளுக்கு.

இந்த ஆண்டு 4054·57 மில்லியன் யூனிட்டுகள் வெளிவிடப்பட்டதில், விநியோகத்தில் 671·01 மில்லியன் யூனிட்டு மின்சாரம் கழிந்துவிட்டது. இது ஏறக்குறைய 25% இழப்பாகும். இதனைப் பொருட்படுத்தாது கழக அரசு 8¼ பைசாவுக்கு விவசாயிகளுக்கு வழங்கி வந்துள்ளது.

மின்சார போர்டு அமைக்கப்பட்ட நாளிலிருந்து தமிழக அரசுக்கு, 1—1—57-ம் நாள் கையிருப்பான மூலதனத்தின் அடிப்படையில் வட்டி கொடுக்கவேண்டும் என்ற சட்டம் உள்ளது. 1-1-57-ம் நாளைய மின்சார போர்டின் மூலதனம் தமிழக அரசு கொடுத்த மூலதனமாகக் கருதப்படவேண்டும் என இந்திய மின்சாரச் சப்ளைச் சட்டம்-1948 கூறுகிறது அதன்படி மின்சார போர்டு இதுவரை அரசாங்கத்திடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் பெற்றுள்ள 270 கோடி ரூபாய்க்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12 கோடி வட்டி கட்டி வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தல்—அதாவது இப்போது—இந்தக் கடன் 400 கோடியாக உயரும். இதற்கு ஆண்டொன்றுக்கு மின்சாரபோர்டு 18 கோடி ரூபாய் வட்டி கட்டவேண்டும்.

ஆனால் மின்சார போர்டின் நிலை என்ன? மற்ற மாநிலங்களிலே உள்ள கட்டணங்களின் நிலையைவிட இங்கே மிகக் குறைவு. இதனால் மின்சார போர்டு ஆண்டொன்றுக்கு 14¼ கோடி இழப்பு அடைகிறது. தொழிற்துறையிலே உள்ளவர்களுக்கு 11·6 பைசா வீதம் கட்டணம் போடாததால் 5½ கோடி ரூபாய் போர்டு நஷ்டமடைகிறது. இன்னும் விவசாயிகளின் சலுகையால்மட்டும் ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. விவசாயத்துறை மின்சாரத்தைப் பயன்படுத்துவதை வைத்துக் கணக்கிட்டால் அது 4-வது இடத்தையே வகிக்கிறது. அப்படியிருந்தும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் எண்ணத்துடன் அவர்களுக்கு மிகப்பெரிய சலுகை காட்டப் படுகிறது. ஆனால் அண்டை மாநிலமான மைசூரில் ஒரு ஆண்டுக்கு ஒரு குதிரைத் திறன் உள்ள எஞ்சின் வைத்து ஓட்டுவதற்குரிய குறைந்த கட்டணம் (விவசாயத் துறையில்) 24 ரூபாயிலிருந்து 48 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் இந்தக் கட்டணம் ரூ. 17-50 தான்!

மின்சார போர்டின் இந்த அவல நிலை கண்டே இங்கே வந்த உலக பாங்கியின் குழு இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களிலும் மின்சாரக் கட்டணங்களை அதிகப்படுத்தச் சிபாரிசு செய்தது. மேலும் தமிழ் நாட்டுக்கு வந்த ஐந்தாம் நிதிக் குழுவும் இதனையே கூறியது. மின்சார போர்டின் தொழிலாளர்கள் யூனியனும், தான் அளித்த ஒரு அறிக்கையில் 8¼ பைசாவிலை 10 பைசாவாக உயர்த்தக் கோரியது. விவசாயத்துறை இதுவரை அதிகமாகச் சலுகை காட்டப்பட்ட துறை என்றும், சமூகத்தின் மற்ற அங்கங்களைவிட அவர்கள் வரியால் பாதிக்கப்படவில்லையாதலால் பொருளாதார நிபுணர் சமீபத்தில் இத துறையில் உள்ள கட்டணங்களை அதிகப்படுத்த அரசுக்கு அரசியல் துணிவு வேண்டும் என எழுதியிருக்கிறார்.

எனவே அரசு, மின் கட்டணம் யூனிட் 10 பைசாவாக உயர்த்தியிருப்பது மின்சார போர்டின் மிக இக்கட்டான நிலையால் என்பதை உணரவேண்டும். பொது மக்களிடத்தில் வாங்கிய கடனுக்கு வட்டி கூடத் தரமுடியாத நிலையில்உள்ள மின்சார போர்டு. விவசாயிகளுக்கு நன்மை செய்ய இயலுமா? நில உச்சவரம்பின் மேலுள்ள எரிச்சலால் ஒரு சிலர் இப்பிரச்சினைக்கு அரசியல் முலாம் பூச முயன்றாலும், நீதியுள்ளவிடத்தில் தீர்வு கொடுக்கத் தமிழக அரசு தயங்காது. கழக அரசு நீதிக்கு நாணலாய் வளையும்; அநீதிக்கு ஆலமரமாய் நின்று உறுதி காட்டும் என்பதை விவசாயப் பெருங்குடியினர் உணர வேண்டும்.

★

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 29—3—70 | இதழ் 37

# அமெரிக்க ஆயுத உதவி?

பாகிஸ்தானுக்கு அமெரிக்கப் படைக்கல உதவி பற்றிய விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கி இருப்பது துரதிருஷ்டவசமானதேயாகும். 1965-ல் நடைபெற்ற இந்தியா—பாகிஸ்தான் போருக்குப்பிறகு இரு நாடுகளுக்கும் கொடுத்துவந்த படைக்கல உதவியை அமெரிக்கா நிறுத்தி வைத்திருந்தது.

ஆனால் மீண்டும் மீண்டும் பாகிஸ்தான் நெருக்குதல் காரணமாக ஆயுத உதவி பற்றிய செய்திகள் வந்தபோதெல்லாம் இந்தியாவின் பலத்தக் கண்டனம், எதிர்ப்பு காரணமாக அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்வதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்திருக்கிறது.

ஆனால் இப்போது. அமெரிக்க வெளிநாட்டிலாகா செயலாளர் திரு. ரோஜர்ஸ், இதுபற்றிய புதிய தகவல் ஒன்றை வெளியிட்டு பிரச்னைக்குச் சூடுண்டாக்கிவிட்டிருக்கிறார்.

இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்குமே ஆயுத உதவி செய்வது பற்றிய யோசனை கொஞ்சகாலமாகவே பரிசீலனையிலிருந்து வந்ததாகவும், இது இப்போது இறுதிக்கட்டத்தை எட்டி, ஜனாதிபதி நிக்சனின் முடிவுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். அந்த இறுதி முடிவு எப்படிப்பட்டதாக இருக்கக்கூடும் என்று யூகித்துப் பார்க்க முடிந்தவகையில், மற்றொரு தகவலையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு, துருக்கியின் மூலம் நூறு டாங்குகள் சப்ளை செய்யும் விஷயம் இன்னும் அரசின் ஆய்விலேயே இருக்கிறதென்றும், இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படக் கூடும் என்றும் அறிவித்திருக்கிறார் திரு. ரோஜர்ஸ்.

துருக்கி, அமெரிக்காவின் இராணுவக் கூட்டில் உள்ள நாடு. எனவே, துருக்கி விரும்புகிற, வேண்டுகிற அளவுக்கு அமெரிக்கா ஆயுத உதவி செய்ய முன்வருவதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் அவ்வாறு பெற்ற உதவி ஆயுதங்களை இன்னொரு நாட்டுக்கு விற்பனை செய்வதென்றால், அமெரிக்காவின் அனுமதி பெற்றுத் தீரவேண்டும் அனுமதி தரும் இந்தயோசனை தான், ஆய்விலிருப்பதாக வெளிநாட்டிலாகா காரியதரிசி மறைமுகமாக அறிவித்திருக்கிறார்.

துருக்கி, தன் பழைய போர்த் தளவாடங்களை இன்னொரு நாட்டுக்கு விற்றுவிட்டு, புதிய கருவிகளைச் சேகரித்து வைத்துக் கொள்வதைக் குற்றமென யாரும் கருத முடியாது. ஆனால், அவற்றை பாகிஸ்தானுக்குத் தான் விற்க வேண்டும் என்று கருதுவதைத் தடுக்க முடியாவிட்டாலும் ஆட்சேபிக்க இடமுண்டு. காரணம், பாகிஸ்தான் எந்த அளவுக்கு ஆயுதப் பெருக்கத்தில் முன்னேற்ற மடைகிறதோ, அந்த அளவுக்கு, தன் வலிவுச் சோதனைக்கு இந்தியாவையே இலக்காகக் கொண்டிருக்கிறது என்பது கடந்த கால வரலாறாக விருக்கிறது.

இந்த நிலைமைகள் யாவும், அமெரிக்காவுக்குத் தெரியாது என்று எவரும் கூறத் துணியமாட்டார்கள். ஆனால், இந்தியாவுக்கெதிராக பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்ய அமெரிக்கா இப்போது ஏன் யோசனையிலிறங்க வேண்டும் என்பது ஆராய்ச்சிக் குரியதாகும்.

வியட்நாம் விவகாரத்தில், இந்தியாவின் நிலை, அமெரிக்காவின் நிலைக்கு மாறுபட்டதாகும். இந்த மாறுபட்ட நிலை, அமெரிக்காவிலேயே வலுவுற்றுக் கொண்டுமிருக்கிறது. தெருக்களில் எதிர்ப்புப் பதாகைகளை ஏந்திக்கொண்டு; எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக் கொண்டு, ஊர்வலம் செல்லத் தொடங்குகின்ற காட்சிகள் சாதாரண சம்பவங்களாகிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இந்தியாவும் மாறுபட்டக் கருத்தைப் பிரதிபலித்துக் காட்டுவது, அமெரிக்க அரசின் எரிச்சலைத் தூண்டுவதாகத்தானிருக்க முடியும். ஆனால் இந்த எரிச்சலை நேரடியாகக் காட்டுவதை உலக அரங்கு ஒப்புக்கொள்ளாது.

அதே நேரம், இந்திய அரசும், இந்தியாவின் பல மாநிலங்களிலும் உள்ள அமெரிக்கக் கலாசார நிலையங்களை மூடிவிட வேண்டும் என்று அமெரிக்க அரசுக்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறது.

ஒரு நாட்டின் கலாச்சார நிலையங்கள், இன்னொர் நாட்டில் செயல்பட அனுமதித்ததன் காரணமே, இரு நாட்டு மக்களுக்கும் கலாசாரத் தொடர்பும். அதன் மூலம் நட்புறவும் ஏற்பட வழிவகை ஏற்பட வேண்டும் என்பதுதான். இந்த நோக்கத்துக்கு எந்த வகையில் களங்கமேற்படுத்தின அமெரிக்கக் கலாசாரக் கழகங்கள் என்பது விளக்கப்படவில்லை. நட்பு நாடொன்றுக்கு இதுபோன்ற கட்டளைகள் பிறப்பிக்கப்படும்போது, அதிலே ஏதேனும் முக்கியத்துவம் இல்லாமலிருக்க முடியாது.

இந்த நிகழ்ச்சி, காரணம் எதுவானாலும் அமெரிக்காவின் ஆத்திரத்தைத் தூண்டக்கூடியதே யாகும்.

ஆனால், இதுபோன்ற அற்பக் காரணங்களுக்காகப் பகை நாடொன்றுக்குப் போர்க் கருவிகளின் உதவிக்கு ஊக்கமளிக்கப்படுவது அருவெறுக்கத்தக்க நடைமுறையாகும். ஒருக்கால், இந்தியாவின் மீதுள்ள எரிச்சலைக் கேட்ட மட்டுமே இதுபோன்ற செய்திகளைத் தந்திருக்கக்கூடும். ஆனால் துருக்கியின் செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எதிரான முடிவை எடுக்கத் தயாராகிவிட்டது என்றே கருதவேண்டியிருக்கிறது.

இந்தியாவின் நடவடிக்கைகள் சரியானவையா? தவறானவையா என்பதைப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள அமெரிக்கா கருதியிருந்தால், அதுதான் சரியான ஜனநாயகப் பாரம்பரியம் எனலாகும். மாறாக, பகை நாட்டைத் தூண்டும் போக்கில் ஈடுபடுவது வன்மையான கண்டனத்துக் குரியதாகும்.

இந்திய அரசு, தன் முழுவலிவையும் காட்டி, இதனை எதிர்க்கத் துணிவுகொள்ள வேண்டும்; தவறு தன்பாலேயிருக்குமென்று இந்தியா கருதுமானால், தவற்றினைக் களைந்துகொள்ளுவதில் கௌரவம் கருதாது முனையவேண்டும்!

அமெரிக்காவும், தன் இறுதி முடிவை இந்தியாவின் நலனுக்கு எதிரானதாக இருக்கும்படியாக மாற்றிக் கொள்வது, உலகத்தின் அமைதிக்கே ஊறுண்டாக்கும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.




[17]

"தேவி கட்டளையிட்டாளோ இல்லையோ அது ஒரு புறம் கிடக்கட்டும், ஆரியனிடம் சிக்கி நாட்டை முடமாக்கிய மலர்புரி அரசியிடமிருந்து நாட்டை மீட்டிட நாம் ஏன் நமது சக்தியைப் பயன் படுத்தக்கூடாது?'' என்று கரிமுகன் யோசித்தான். விநாடியிலே காட்டுத் தீபோல அவனுடைய ஆவல் மூண்டுவிட்டது. ஆரியனை நோக்கினான்; சரி! நான் படைகளுடன் அரண்மனையை முற்றுகையிட்டால், நீ புதியதாகச் சிருஷ்டித்துள்ள தேவிசேனை என் படையுடன் போரிடுமா?'' என்று கேட்டான்.

,,தேவியின் கட்டளையை நிறைவேற்றவேதேவி சேனை'' என்று மறுமொழி புகன்றான் ஆரியன்.

"மக்கள் புரட்சி செய்தால்..." என்று கரிமுகன் இழுத்தான்.

"ஆம்! அது படைகளின் வலிமையைவிட ஆபத்து; பெரும் புயல் அல்லவா மக்களின் கோபம்? அதற்காகத்தான் தேவி முதலிலே உன்னைத் திருக் கோயிலை வலம்வந்து திருநீறணிந்து, அவளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டுப் பீதாம்பரங்களை நீ அணிந்து, பிறகே அரண்மனை செல்ல வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறாள். நீ தேவியிடம் அருள் பெற்று இக்காரியத்தைச் செய்கிறாய் என்பது தெரிந்தால்தான் மக்கள் புரட்சி செய்யாதிருப்பர். உனக்குத் தேவியிடம் பக்தி பிறக்கும்போது பிறக் கட்டும், கனிய காலம் பிறக்கும். இப்போது யுக்திக்காகக் கவனித்தாலும், நான் கூறினதே சரி என்று உனக்குத் தோன்றும்'' என்று ஆரியன் மொழிந்தான்.

"உண்மைதான்! ஊர் மக்கள், என் உண்மையான நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாமல் உறுமி, எதிர்த்து என் முயற்சியைக் கெடுக்கவும் முற்படுவர். ஆரிய முனியே! உன் யோசனையே சரி! அதன்படியே செய்வேன். ஆனால் ஒன்று, இக்காரியம் நடைபெறுவதற்கு மணிவீரன் தடையாக இருப்பான்! அவனை எங்காவது அனுப்பினால் நல்லது'' என்று கரிமுகன் கூறினான்.

"வீரமணி இன்றிரவு தேவி சேனையுடன் மலர் புரிக்குத் தெற்கே உள்ள மலைக்காட்டிலே சந்தனக் கட்டைகளைத் தேவிக்குக் கொண்டுவரப் புறப்படுகிறான். இங்கு அவன் வரும்போது சந்தன மணத்துடன் நுழைவான், நீ அரச மணத்துடன் அவனை வரவேற்று உபசரிப்பாய், இதுவும் தேவி கட்டளை தான்!'' என்றான் ஆரியன்.

"நல்ல தேவி! அரசியல் தந்திரங்கள் அவ்வளவும் அறிந்து தேவி திட்டமிடுகிறாளே'' என்று கரிமுகன் கேலி செய்தான். "அன்னையின் தந்திரத்தை நீ என்ன அறிவாய்?' என்று ஆரியன் பதிலுரைத்தான். அப்போது அவன் மனதிலே, "மடையன்! ஆரிய ஆதிக்கத்தை அடக்கி அரசாள வேண்டுமென்று எண்ணுகிறான். அதற்கு ஆரியனொருவன் கூறும் யோசனையைத் தழுவிக்கொள்கிறான். சிலந்திக் கூண்டை நெருங்கும் பூச்சி இவன்'' என்று எண்ணினான். அந்த எண்ணம் அவன் முகத்திலே ஓர் ஜொலிப்பைத்தந்தது.

கரிமுகன் புரட்சி முதலிலும், பிறகே அரசியின் கொலையும் நடத்தப்பட வேண்டுமென்று ஆரியன் திட்டமிட்டு, உத்தமனிடம், "தக்க சமயம் வந்ததும் தெரிவிக்கிறேன், பொறுத்திரு''என்று கூறிவிட்டு, கரிமுகனை உடனே அரசிக்கு எதிரிடையாகப் புரட்சி செய்யும்படித் தூண்டினான். எந்த அரசில் சேவகம் செய்து உணவும், உடையும், விடுதியும், புகழும்,

செல்வாக்கும் பெற்ருரேமோர், அதே அரசுக்கே ஊனம் விளைவிப்பது அறமாகுமா, என்று கரிமுகனின் மனம் கலங்கிற்று. 'அரசாள வேண்டுமென்ற பேராசை பிடித்தலைந்தே கரிமுகன் இக்காரியம் செய்கிருன்'' என்று அரசி எண்ணிடின் என்ன செய்வது! மக்களும் அதுபோலக் கருதிஞல். ஆபத்தாகவன்ரோ முடியும் என்றும் அஞ்சிஞன். மக்களை மயக்க தேவி பக்தனுக வேடம் போடுவதே சிறந்த வழி என்று அவனுக்குத் தோன்றிற்று. ஆனுல், புரட்சி செய்வது சரியா, தவரு என்ற சந்தேகம் மட்டும்அவன் மனத்தைக் குடைந்தபடி இருந்தது. அதிலும் முன் அறிவிப்பின்றி, திடீரெனப்பாய்ந்து தாக்குவதும், எந்தப்படை தனக்குப் பாதுகாப்பளிக்கும் என்று அரசி கருதியிருந்து வருகிருளோ, அதே படையையே துரோகச் செயலுக்கு உபயோகித்துக் கொள்வதும் ஒழுங்காகுமா, தமிழகம் ஒப்புமா என்பது வேறு அவன் மனத்தைக் குடைந்தது. கரிமுகனுக்கு உண்மையில் அரச போகத்திலே மோகம் இருப்பின் ஆரியன் கூறினதும் "ஆம்" என்றுரைத்து, அரசி மீது பாய்ந்திருப்பான். ஆனுல் அவன் உள்ளத்தில் அத்தகைய கள்ளச் சிந்தை இல்லை. அரசியின் கள்ளங் கபடமற்ற முகமும், கருணை ததும்பும் கண்களும் கரிமுகனின் நினைவிற்கு வரவே அவனது மனம் பதறிற்று. மனதிற்குச் சாந்தியும் உறுதியும் பிறந்தாலன்றித் தன்னுல் ஏதும் செய்ய முடியாதென்று தோன்றவே, தனக்கு ஆசானுக இருந்த பெரியார் ஒருவரிடம் சென்று, விஷயத்தை வெளிப்படையாகக் கூருமல், மறைமுகமாகப் பேசலானுன்.



"மலர்புரி அரசு நிலைமை தங்கட்குத் திருப்தி தருகிறதா? தமிழ் வீரமும், நெறியும், அறமும் மலர்புரியிலே மணக்கிறதா?"

"நல்ல கேள்வி கேட்டாயப்பா கரிமுகா! பாலில் விஷங் கலந்த பிறகு, தங்கக் கோப்பையிலே உள்ள தீஞ்சுவைப் பால் எப்படி இருக்கும் என்று தர்க்கித்துக் கொண்டு இருப்பார்களா! ஆரியனிடம் பிடியைக் கொடுத்துவிட்ட பிறகு மலர்புரியிலே தமிழ் அரசு ஏது?"

"நம்மை ஆள்வது தமிழ் மங்கைதானே! ஆரியன் ஏவலனுகத்தானே இருக்கிருள்"

"ஏவலன், காவலர் மகளைக் கேவலம் பதுமை போல ஆட்டி வைக்கிருனே தம்பி! ஏதுமறியாதான் போல் பேசுகிருயே. ஆள்வது தமிழ் மங்கை என்ருய். சிங்கத்தின் முதுகில் சிறுநரி சவாரி செய்வது போல, மலர்புரி அரசின் முதுகில், முனிவன் அமர்ந்திருக்கிருன். ஆரியனே ஆண்டால் நான் அஞ்சமாட்டேன், அந்த ஓர் காட்சியே தமிழர் கண்களைத் திறந்துவிடும். அரசனுக அவன் அதிக நாட்கள் நிலைக்க முடியாது. இப்போது அரசி என்று ஓர் தமிழ் மங்கை இருப்பது. ஆரியனின் காரியத்துக்குத் தக்க திரையாகவன்ரோ இருக்கிறது."

"நோய் தீர வழி இல்லையா?"

"யார் முயன்ருர்கள் இதுவரையில்? என் முதுமை என்னைத் தடுக்கிறது. மணிவீரனின் வறுமை அவனுக்குக் குறுக்கே நிற்கிறது. உன் பதவி உன்னை மடக்குகிறது. ஊர் மக்களோ உண்மையை உணரவில்லை. ஆரியக் கற்பனை அவர்களின் உணர்ச்சியின் ஊற்றைக் கெடுக்கிறது."

"உண்மை! ஆனுல், இந்த நிலையை மாற்ற நாம் என்ன செய்ய முடியும்? அரசியோ யார் கூற்றையும் கேட்பதில்லை. அரசிக்கு எதிராகக் காரியம் செய்வதோ கொடிய குற்றமாகும்."

"எந்த நீதிப்படி குற்றம்?"

(14-ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்:

# இரண்டுங் கெட்டவள்!

—திருவாரூர் முத்துராமன்—

தண்ணீர்க் கயத்துத் தாமரை, தலைதூக்கி நின்றது போலவே தங்கமும் தலை முழுகி விட்டு நீரில் முகம் நிறுத்தி நின்றாள். காலை இளஞ்சூரியன் முழுதாகக் கண் விழிக்கவில்லையென்றாலும், கன்னிஇளம் பெண்களது கூட்டம், கருக்கல் கட்டத் தொடங்கியதுமே கண் விழித்துத் தீரவேண்டுமென்பது காலதேவனது கட்டளையாயிற்றே!

கிடைக்கின்ற வரையில் பருகித் தீர்ப்போம் என்ற வேட்கையால் காளையர் கூட்டம் கன்னியர் எழிலை மாந்தித் தீர்த்துவிட, போட்டிப் போட்டுக்கொண்டு அந்தக் குளக் கரையில் குழுமி விடுவது வாடிக்கை தான்! இந்த வாடிக்கை சில வேளைகளில் வேடிக்கைகளையும் விளைத்து விடுவதுண்டு.

அப்படிப்பட்ட ஒரு வேடிக்கை தான் தங்கத்துக்கு நினைவுக்கு வந்து விட்டது. நீரில் அமிழ்ந்து எழுந்தவள், அப்படியே நிலைக்குத்தி நின்றாள்.

இரண்டாண்டுகளுக்கு மேலாகி விட்டது அது நடந்து முடிந்து. நேற்று நடந்தது போன்ற நினைவு! நெஞ்சை நிறைத்துக் கொண்டு நினைவுகளை அசை போடத் தொடங்கிவிட்டது.

“தயாளன் என்ற பெயர் அவனுக்குப் பொருந்துமா? தயவினை ஆளுகின்ற ஆளுமைப் பண்பு அவனிடம் இருக்கிறதா? சே! இரக்கமே இல்லாதவன்! கல்நெஞ்சக்காரன்!

அவன் தயாளனாக இருந்தால், நான் ஏன் இன்று இப்படி இருக்கிறேன்? அவன் தயவுக்காக நான் காத்திருந்தேனா? உயிரே! உடலே! எழிலே! இன்பமே என்றெல்லாம் சொல்லாஞ்சலி சொரிந்து கொண்டிருந்தேனா நான்? சே! பொல்லாதவன் அவன்!

கண்களே! விழிப்பாவைகளை நீங்கள் இழந்துவிட்டீர்களோ! இமையே, நீ சோர்ந்து களைத்துப் போய்விட்டாயோ! உணர்வு ஒடுங்கிப் போகவில்லையென்றால் செயலாற்றுங்கள்! எண்ணமே, நீ நிர்க்கதியாகி விட்டாயா? நிலை பிறழ்ந்து விட்டாயா? வேண்டாம்! அச்சிரக் காலை அகன்றே தீரும்! நீயும் உன் சோகத்தை மறந்துவிடு!

தயாளனை நான் பார்த்தேனா? இல்லை, அவன் என்னைப் பார்த்தானா? இப்போது அது எனது நினைவுக்கு வரவில்லையே! ஓ, சரிதான்! அதோ, அங்கே பல் துலக்கிக் கொண்டிருக்கிறார்களே பார்வை மட்டும் இந்தப் பாவையர்மீது நீந்திக் கொண்டிருக்கிறதே! இந்த சிங்கக் கூட்டத்தில் ஒருவனாகத்தான் அவனும்—அந்தத் தயாளன்தான்—அன்றைக்கு இங்கே வந்து அமர்க்களம் நடத்திக் கொண்டிருந்தான்!

நீராட வந்தோமோ, கரையேறினோமோ என்றல்லவா இருக்க வேண்டும்? குதியல் என்ன வேண்டிக் கிடக்கிறது? நீந்தத் தெரிந்திருந்து குதியல் போட்டாலாவது மன்னித்து விடலாம்! அதிலும் பெண்கள் பகுதிக்கு வந்து குதியாட்டம் போடுவதை எப்படி மன்னிப்பேன்? நீந்தத் தெரியாமல் ஆடுவதை மன்னிக்கவே கூடாதல்லவா!

சரி, ஆட்டம் போட்டான்! மன்னித்தும் விட்டேன்! தாமரைப் பூக்களும், அல்லிக் காய்களும் அவனை என்ன செய்தனவாம்! காயைப் பறித்து எறிந்தான்! போகட்டும். தரைமீது நின்றவர்கள் தாவித் தாவி எடுத்தார்கள்! அதுவரையில் சரிதான்! தாமரைப் பூக்கள்? என்னைப் பறித்துக் கொள் என்று கெஞ்சினவா என்ன? பறித்தான்! காயை வீசியெறிந்ததுபோல் தாமரைப் பூக்களையும் எறியத்தானே வேண்டும்! தயாளன், பூக்களைப் பறித்து எறியத்தான் செய்தான்! எங்கே! கரைமீதா? கூடக் குதித்துக் கொண்டிருந்த குரங்குகள் பக்கமா?

இல்லை இல்லை! என் பக்கமாக எறிந்தானே! என் முகத்தில்கூட ஒன்றுபட்டுத் தெறித்ததே! நான் அவ்வளவு சீக்கிரம் மறந்துவிடுவேனா என்ன?

அடுத்த வீட்டுக்காரன்தான்! இருக்கட்டுமே, குளத்தில் குளிக்க வந்தால் இப்படியா? மலரால் அடித்தானே! முகத்தில் மட்டும்தான் பட்டது அது! என் மனத்தில் அல்லவா காயம் பட்டுவிட்டது! இரண்டாண்டுகளாகக் காயம் ஆறவில்லையே! கனன்று கொண்டுஅல்லவா இருக்கிறது!

மலர்க்கணை என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்! அந்தக் கணையின் தாக்குதலுக்கு நானே இலக்காகிவிட்டேனே!

அடுத்த வீடு என்றால் இப்படியா? என்ன தைரியத்தில் வீட்டுக்குள்ளேயே வந்து நோட்டம் போடத் தொடங்கினான்! அன்னை இருக்கின்றாள்! என் உடன் பிறந்தவர்கள் இருக்கிறார்கள்! தந்தையும் இருக்கிறார்! என்றாலும் வீட்டுக்குள் நுழைந்து வளைய வளைய வந்தானே!

என்ன பெற்றோர்கள் இவர்கள்! எனக்கு அவர்கள் எல்லாம் வேலி என்று வேறு வெட்கமின்றிச் சொல்லிக் கொள்கிறார்கள்! கொள்ளைக்காரன் வீட்டுக்குள்ளேயே திரியத் தொடங்குகிறான்! அப்பப்பா, அவன் கண்கள்தான் எப்படியெல்லாம் சுழன்றன! பரிதாபமாகத்தான் எனக்கும் இருந்தது!

திருடன்! திருடன்!! என்று ஒலி எழுப்பி விடலாமா? என்று கூட யோசிக்கத்தான் செய்தேன்! யோசித்துக் கொண்டே மலர் தொடுத்துக் கொண்டிருந்தேன்! என் கண்கள் மிரட்சியடையத் தொடங்கிவிட்டன.

“எங்கே அத்தை போய்விட்டாய்?” என்று கேட்டுக்கொண்டே நான் இருந்த இடத்தில் வந்து நின்றான்! என் நெஞ்சு வெடிக்காததினால்தான் நான் இன்னமும் இப்படி இருக்கவேண்டியதாகிறது.

மாமன் மகனாய் இருந்தால்தான் என்ன? எதற்கும் ஒரு அளவு இருக்க வேண்டாமா? மலரை எறிந்து காயப்படுத்தினான் மனத்தில், நெஞ்சும் கெட்டுத்தான் போயிற்று! நிலைகுலைந்தும் போனேன்!

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அன்றைக்கு அந்தி நேரம். மாலை நேரம் வந்தாலே மனதைக் கெடுத்துவிடுகிறது. குளு குளுவென்று தென்றல் வீசத்தான் செய்கிறது. காற்றில்தான் குளிர்மை இருக்கிறது! என் உடலில்! உள்ளத்தில்? அப்பப்பா! நெருப்பாய்க்கொதிக்கிறதே! என்மேனிபட்ட காற்றுக்கூட கனலைத்தான் கொண்டு



போகும்! அப்படிப்பட்ட ஒரு மாலை வேளை அது.

மனதுக்கு என்ன? கட்டுப்பாடு களைச் சட்டை செய்யத் தெரியுமா? சட்டை செய்யவேண்டும் என்று எண்ணத்தான் செய்கிறதா? பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. பாகாய் உருகிக்கொண்டிருந்தேன். என் உள்ளத்து உளைச்சலைக் கண்டோ என்னவோ, என் தம்பி, அன்புடன் வளர்த்துக்கொண்டு வந்த பைங்கிளி, என்னைப்பார்த்த படியே கீச் கீச் சென்று ஓயாது ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது. அந்தக் கூண்டுக்கிளிக்கு, ஒருவேளை என்னைப் போன்றே ஏதேனும் நோய் பற்றிக் கொண்டதோ என்னவோ!

வேதனையுடன் எழுந்து சென்று, கூண்டைத் திறந்து, கிளியைக் கையில் எடுத்துக்கொண்டு வந்து நிலாமுற்றத்தில் அமர்ந்தேன்! மறு படியும் மறுபடியும் கத்திக் கொண்டே இருந்தது!

கிளியைச் சமாதானப்படுத்த வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டுவிட்டது! என் நிலையை, அதன் நிலையாய் மாற்றி ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தேன்! என் உள்ளத்து உணர்ச்சிகளை யெல்லாம் கொட்டிக்காட்டியிருக்கிறேன். தயாளன் தந்துபோன நோய்பற்றித் தான் அதிகம் பேசி இருப்பேன்.

பின்னால் சற்று தூரத்தில் கூடத்திலிருந்து சிரிப்பொலி கேட்டது. திரும்பிப் பார்த்தேன். பார்வதியும் பங்கஜமும் நின்று நான் கிளியிடம் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கென்ன? நான்படும் பாடு அவர்களுக்குத் தெரியுமா? தெரிந்தால்தான் எனக்குப்பயன் உண்டோ? பழிவேண்டுமானால் கிடைக்கும்! பைத்தியக்காரிகள் அவர்கள், என் நோய்—என்னையே, கொன்று கொண்டிருக்கும் அந்த நோய்! சே! நோயா அது! நோயை விடபயங்கரமானது! பரிதாபமானது. சிந்தித்துப் பார்த்தால் பழி சேரத் தக்கது!

எனக்கு இப்படியொரு நோய் வரலாமா? மேனி இளைத்துவிட்டது. எண்ணங்கள் எல்லாம் கருகிக் கொண்டிருக்கின்றன! அவள் என் தோழியா? தவறு கண்டவிடத்து, இடித்துக் கூறியல்லா என்னைத் திருத்தி இருக்கவேண்டும்? காதல் நோய் பொல்லாதது; அதனால் அது பற்றாமல் பத்திரமாக இருக்க வேண்டும் என்றல்லவா எடுத்துச் சொல்லி இருக்கவேண்டும்!

அவனுக்கென்ன! பத்து காதத் துக்கு அப்பாலே போய்க்கூட அமைதியாக இருக்க முடியும்! அத்தை மகள்தானே, எத்தனை நாளும் காத்திருப்பாள் என்று அக் கறையற்றிருக்க முடியும்! முடிய வில்லையே என்னால்!

எதுதான் என்னால் முடிகிறது! நோயும் மிகுகிறது! மெலிவும் மிகு கிறது! காமமும் மிகுகிறது! அக்கம் பக்கத்தாரது ஏச்சும், பழிப்பும் மிகு கிறது. எதையாவது தடுத்துக் கொள்ள முடிகிறதா?

நெஞ்சே! மாய நெஞ்சே!! அய லார் தூற்றும்பழியிலிருந்து என்னைக் காத்துக்கொள்ளும் ஆற்றலும் எனக் கில்லை. இந்த நிலை ஏற்படும்படி யாய் நோய் தந்தானே, இந்த நோயைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலும் எனக்கில்லை. நீ தந்த நோயால் நான் பாடாய்ப் படு கிறேன் என்று—

நோய் தந்தவனுக்கு எடுத்துக் கூறவும் முடியவில்லை. எடுத்து ரைத்து நோய் தீர்த்துக்கொள்ள முடியாதவாறு நாணமும் என்னைத் தடுக்கிறது! என்ன செய்வேன்? "இரண்டுங்கெட்டுப் போனேனே!"

முழுதாகக் கண் திறந்துகொண் டான் கதிரோன்! தங்கத்தின் சிந் தனையும் மெல்ல கண் திறந்தது. "என்னடி தங்கம் இது! தலையி லிருந்து நீர் சொட்டுகிறதா? இல்லை அழுகிறாயா?" என்றாள் பக்கத்தி லிருந்த பார்வதி!

பார்வதியைப் பார்த்து ஒரு புன் னகை! அவ்வளவுதான்! விடுவி டென கரையேறத் தொடங்கினாள் தங்கம். மனம் மட்டும் அந்தக் குறட்பாவை மீண்டும் சொல்லிக் கொண்டது!

"காத்தலும் ஆற்றேன் இந்
நோயை நோய் செய்தார்க்
குரைத்திலும் நாணத் தரும்.
(1162)

★

# ஆனந்தவிகடன் ஆயத்தமாகட்டும்!

[illegible] சென்ற எஸ். எஸ். வாசன் அவர்கள், "ஆனந்த விகடன்" என்ற வார இதழைத் தமிழ் நாட்டில் ஆரம்பித்து 45 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன.

நீண்ட அதன் வரலாற்றில், எந்தத் தமிழ்ப் பெருங்குடி மக்களைத் தம் வாசகர்களாகவும், சந்தாதாரர்களாகவும் கொண்டிருக்கிறதோ, அந்தச் சமுதாயத்துக்கு சென்று இன்றுவரையில் ஏதாவது நல்வழி காட்டியிருக்கிறதா என்பதை ஒரு குழு அமைத்து ஆராய்ச்சி செய்தால்கூடக் கண்டறிய முடியுமோ என்னவோ! ஆனால் தமிழ்ச் சமுதாயத்துக்கும் தமிழ் மொழிக்கும் அது அடிக்கடித் துரோகமிழைக்கத்தக்க வகையில் செய்திகளைத் தந்திருக்கிறது—தந்து வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டுக்கள் ஏராளம் கொடுக்க முடியும்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் கூறுவதுபோல், தமிழன் காட்டு மிராண்டிப் பண்பாடு உடையவனாகவும், இன உணர்வு அற்றவனாகவும் இருக்கின்ற காரணத்தால்தான், விகடன் போன்ற மதிக்கப்பட வேண்டிய ஏடுகள்கூட தமிழ் மக்களது உணர்ச்சியைக் கீறிவிட்டு, ஏற்பட்ட புண்ணில் காரப் பொடி தூவும் பணியிலும் ஈடுபட முடிகிறது என்பதனை இச்சந்தர்ப்பத்தில் சொல்லாமல் இருக்க முடியவில்லை,

திராவிட முன்னேற்றக் கழகம், அது அதன் தாய்க் கழகத்தில் இருந்தபோதும் சரி, அப்புறமும் சரி, இந்தி எதிர்ப்புக்குத் தலைமை ஏற்று, தமிழ் நாட்டின் மானத்தைக் காத்துத் தந்திருக்கிறது—காத்து வருகிறது என்பதனை இன்று விகடன் போன்ற ஏடுகள் மறைக்க முயன்றாலும், தமிழ் நாட்டின் வரலாற்றைப் படைக்கப் போகும் இதயமுள்ள ஒரு வரலாற்றாசிரியன் மறைக்கப் போவதில்லை.

1938 முதலே திராவிடர் இயக்கத்துக்கும் இந்தி ஏகாதிபத்தியத்துக்கும் கடும்போர் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கிறது என்பது இந்த ஆண்டுக்கு பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே பிறந்துவிட்ட ஆனந்த விகடனுக்குத் தெரியாமலிருக்க முடியாது!

1965 ஜனவரி 26 முதல் இந்திக்கு அரியாசனம் தரப்படுகிறது என்று அறிவிக்கப்பட்ட நேரத்தில்—

"உங்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வேன். இது மொழிப் பிரச்னை அல்ல; இது ஆதிக்கப் பிரச்னையே தவிர, மொழிப் பிரச்னை அல்ல. நாம் எந்த அளவிற்குப் பணியத் தயாராக விருக்கிறோம் என்பதைக் கண்காணிப்பதற்காக —அளவிடுவதற்காக, அரசியல் ஆதிக்கக் காரர்கள், அரசியல் சூழ்ச்சிக்காரர்கள் ஏகாதிபத்திய வெறி கொண்டவர்கள் தங்களுடைய மொழியைத் திணித்து "இதைத் தான் நீ ஆட்சி மொழியாகக் கொள்ள வேண்டும்; இதிலேதான் பாடங்கள் நடக்கும்; இதிலேதான் தேர்வுகள் நடக்கும்; இதிலேதான் சட்டங்கள் இயற்றப்படும்; இந்தி மொழியிலேதான் பாராளு மன்றத்திலே பேசுவார்கள்; இது தெரிந்தால் இங்கெல்லாம் வா. இது தெரியாவிட்டால் நீலகிரித் தோதுவர்களைப்போல், குருவிக்காரர்களைப்போல், ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோக்களைப்போல் நீயும் உன்னுடைய நாட்டோடு, கூட்டோடு இரண்டாந்தரக் குடிமகனாய், மட்டரகமான மனிதனாய், ஏனோதானோவாய், எடுப்பார் கைப்பிள்ளையாய் அடங்கிக் கிட" என்பதுதான் உட்பொருளாகும்."

—என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தி பற்றித் தீர்ப்புரைத்திருக்கிறார்கள் என்றால், இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் என்பதாகும்.

**இந்திதான் பொதுமொழியாக — இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்பதிலே கருத்து மாறுபாடுடையவர்கள் காங்கிரசிலேயே கணிசமான பகுதியினர் உண்டு.**

**மற்ற மாநில மொழிகளுக்குரிய சம அளவு அந்தஸ்த்துதான் இந்திக்கும்இருக்க வேண்டும் என்ற கருத்துடையவர்களும் காங்கிரசிலே ஏராளம் இருக்கிறார்கள்.**

**ஆனால் இந்தி இணைப்பு மொழியாக இருக்கலாம் என்ற எண்ணம் உடையவர்கள் எவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை. அன்றும் இருந்ததில்லை; இன்றும் இல்லை; இனி என்றும் இருக்கப்போவதில்லை.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்குட்டி உறுப்பினன்கூட இந்தி எதிர்ப்பு உணர்ச்சி உடையவனாகத்தான் இருக்கிறான்,**

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சிக்குக் களங்கம் கற்பிக்க நினைக்கும் ஆனந்தவிகடன், கழகத்துக்குக் களங்கம் உண்டாக்கவில்லை. தனக்குதானே, ஒரு இதழ் அனுசரிக்கவேண்டிய நடுநிலைக் கொள்கைக்குக் களங்கம் உண்டாக்கி இருக்கிறது.

ஆனந்தவிகடன் 22–3–70-ம் நாளைய இதழில் பதினைந்துபேர் எங்கே? என்ற தலைப்பில் எழுதியிருக்கும் தலையங்கத்தில்—

"......தி. மு. க. வினரோ, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கென்றே தமிழ் மக்களால் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பவர்கள். 'இந்தியை அரசியல் சாசனத்திலிருந்துஅகற்றிவிடவேண்டும்' என்று அவர்கள் கொண்டுவந்த அந்தத் தீர்மானத்தைப் பற்றி அவர்களில் பதினைந்துப்பேர் அலட்சியமாக இருந்ததற்குக் காரணம் என்னவென்றே புரியவில்லை......"

என்று களங்கம் காண முயன்றிருக்கிறது. தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபத்தைந்து பேரும் வாக்களிக்கவில்லையே என்ற பெரும் அங்கலாய்ப்பில் பிறந்த குற்றச் சாட்டாகக்கூட இதனைக் கருதமுடியவில்லை.

குடியரசுத்தலைவரின் உரைமீது தி.மு.க. கொண்டு வந்த திருத்தத் தீர்மானம் வெற்றிபெற்றுவிடும் என்று கழகம் கருதியிருக்குமானால், நாடாளுமன்றத்திலேயே அது வீற்றிருக்க அருகதையற்றது என்று விகடன் எடுத்துக் காட்டி இருந்தால் பெருந்தன்மையுடன் அதனைத் தி. மு. க. ஏற்றுக் கொண்டிருக்கத்தான் வேண்டும்.

தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி இன்றைக்கும் உச்சக் கட்டத்தில் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், நேற்று அரசியல் காரணம் கருதி உதட்டிலிருந்து இந்தி எதிர்ப்பு உரை நிகழ்த்திய காமராசர்அல்ல! இது விகடனுக்குத்தெரியாது என்றும் நம்ப முடியாது.

காமராசருக்கேகூட இந்தியை எதிர்க்கவேண்டும் என்ற எண்ணம் (உண்மையில் அல்ல வென்றாலும்) ஏற்பட்டிருக்கிறது என்றால், தி. மு. க. அந்த வழியில் கையாண்ட அரசியலை தானும் கையாள வேண்டும்; தி. மு. க. போல் தானும் மறுபிறவி எடுக்கவேண்டும் என்ற வான்கோழி எண்ணம்தான் காரணம் என்பதை அரசியல் தெளிவுள்ளவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

அப்படிப்பட்ட காமராசர், இந்தி எதிர்ப்பு உணர்ச்சியில் கழகம் மீது களங்கம் கூற முற்பட்ட வேளையில், காமராசரது முகம் எதனால் மூடப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டவேண்டும்; தமிழகத்துக்கு மட்டும் அல்ல—இந்தியத் துணைக்கண்டத்துக்கு மட்டுமல்ல—உலகத்துக்கே அவரது முகமூடியைக் கழற்றிக் காட்டவேண்டும்; இன்றைக்கு மட்டும் அல்ல—நாடாளுமன்ற நடவடிக்கை ஏடுகள் உயிர்ப்புடன் வைக்கப்பட்டிருக்கிற காலம் வரையில் காமராசரது போலி வேடத்தைக் கலைத்துக் காட்டவேண்டும்;

அதுமட்டுமல்ல—எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் தி. மு. க. இந்தி எதிர்ப்புத் தீர்மானம் கொண்டு வருமானால், அப்போது யார் யார், எந்தெந்தக் கட்சியினர் தன்னை ஆதரிக்கக் கூடும் என்பதனைக் கண்டறியும் ஒரு வாய்ப்பாகவே திருத்தத் தீர்மானத்தை மன்றம் முன் வைத்தது—என்பது விகடன் ஏற்றுக்கொள்ள முடியாத விளக்கமா?


இந்தி எதிர்ப்பு என்பது விகடன் சுட்டிக்காட்டுகிறபடி உயிர் மூச்சான கொள்கைதான். தி. மு. க. விற்கும் தமிழ் நாட்டுக்குமே உயிர் மூச்சான கொள்கைதான்! மறுக்கவில்லை—மறுக்கத் தேவையுமில்லை.

ஆனால், விகடன் உணர மறுத்திருப்பது — இப்போது கொண்டுவரப்பட்ட தீர்மானம் உயிர்மூச்சான தீர்மானம் அல்ல! காமராசரை ஆழம் பார்க்கும் தீர்மானம்!

மற்றும் தங்கள் ஆதரவாளர்கள் யார் என்பதனை அறிய முயன்ற தீர்மானம்! இதிலே 25 உறுப்பினர்களும் கலந்துகொள்ளாது போனது விகடன் செய்திருப்பதைவிட, மாபெரும் ஜனநாயகப் படுகொலை அல்ல.

விகடன் விரும்பி இருப்பதுபோல், கழகத்தவர் அனைவரும் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்டிருந்தாலும், நிலைமை மாறிவிடாது. ஆனால், அத்துணைப் பேரும் கலந்துகொள்ளாது போனாலும், அவர்கள் இந்தியை எதிர்ப்பவர்கள்தான் என்பதை அகிலம் அறிந்திருக்கும்போது, கலந்து கொள்ளாததற்கான காரணம் புலப்படவில்லை என்று விகடன் புலம்பத் தேவையில்லை. மாறாக,

'ஐயா, காமராசரே! புத்தறிவு வரப்பெற்றவராக இந்தி எதிர்ப்பு நாடகம் நடத்திக்கொண்டு வந்தீர்களே! தமிழகத்திலே அதுபற்றிச் சூறாவளிப் பயணம் நடத்திக் காட்டினீர்களே! நீங்கள் ஏனையா டில்லியிலே இருந்தும் அன்று அந்தத் தீர்மானத்துக்கு வாக்களிக்க நாடாளுமன்றத்துக்குச் செல்லவில்லை? உங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு இந்தி எதிர்ப்புத் தீர்மானத்திற்கு வாக்களிக்கும்படி ஏனையா கட்டளையிடவில்லை — இவ்வளவுதானா உமது வீரம்? தமிழ் நாட்டு மக்களையும், மாணவர்களையும் ஏமாற்றுவதற்குத்தானா இங்கே இந்த நாடகமாடினீர்கள்? அல்லது வடநாட்டுத் தலைவர்கள் உங்கள் தலையில் குட்டி அதுபற்றி வாய் திறக்காமல் இருக்கும்படிச் சொல்லிவிட்டார்களா? ஏன் காமராசரே



நீண்ட மௌனம்? நெடுநாளாக இதுபற்றி ஏனையா வாய் திறக்கவில்லை" என்றுதான் கேட்டிருக்க வேண்டும்.

அப்படிக் கேட்டுவிட்டு, அடுத்த வரியில் தி.மு.க. உறுப்பினர்களே, நீங்கள் 25 பேரும் வாக்களிக்காதது ஜனநாயகத்துக்கு விரோதமானது, தமிழ் மக்களை வஞ்சிப்பதாகும் அது என்று எடுத்துக் கூறியிருந்தால, விகடனது வாதத்தைச் சந்திப்பதிலும், வினவில் உண்மை இருக்கிறது என்று உணர்வதிலும் பொருளிருக்கும்.

இவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு இந்தத் தீர்மானத்தில் காமராசரது பங்கு எந்த அளவுக்கு இருந்திருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டத் தவறிவிட்டு அல்ல — வேண்டும் என்றே மறைத்துவிட்டு, கழகத்தின் மீது மட்டும் களங்கம் கற்பிக்க முயன்றிருக்கும் போக்கைப் பச்சையாகக் கூறவேண்டுமானால் "கலகமூட்டும் போக்கு" என்றே கூறவேண்டியிருக்கும். தமிழினத்தின் மீது சேற்றை வாரி இறைக்க முயல்கிறது அந்த ஏடு என்றே எடுத்துக் காட்ட வேண்டும். தமிழினத்துக்கு எதிரான செய்தி தந்திருக்கிறது அது என்றே விளக்கித் தீரவேண்டும்.

காமராசரது அறியாமையைப்பற்றிக் கூற வந்த நேரத்தில், இது தொடர்பான விஷயத்தில் முதல்வர் கருணாநிதி அவர்கள், 'பதினைந்து பேரும் காமராசரைத் தேடிச் சென்றிருந்தார்கள்' என்று கூறி, காமராசரது

(14-ம் பக்கம் பார்க்க)

# கடவுளைக் காப்பாற்ற புதிய வாரிசுகள்!

"தி.மு.க. ஆட்சி பீடத்திற்குச் சென்றதிலிருந்து கடவுளுக்கு எதிரான இயக்கத்தை திட்டமிட்டு நடத்தி வருகிறது. இத்துறையில் முதற்காரியம் சர்க்கார் அலுவலகங்களிலும் அரசாங்க பஸ்களிலும் திருவள்ளுவர் படத்தைத் தொங்கச் செய்ததும், கடவுள் படங்களை அலுவலகங்களிலிருந்து 'எவ்வித சம்பவங்களுக்கும் இடந்தராமல், அகற்றும்படி ஆணை பிறப்பித்ததும் ஆகும். இரண்டாவது கட்டம் இந்துமத வழிபாட்டு முறையின் புனிதத்தைக் குறைக்கும் வகையில் எல்லா மக்களையும்—இந்துக்கள் அல்லாதவர்களையும்—கோயிலுக்குள் அனுமதிக்கும்படி புது உத்தரவுபோட்டதாகும். எல்லாசாதியினரும் அர்ச்சகர்களாகலாம் என்று அறிவிக்கப்பட்டிருப்பதும் எந்த நோக்கத்துடன் என்பதற்கான விளக்கமே தேவையில்லை!

சமீபத்தில் கடவுள் வாழ்த்துக்குப் பதில், 'கடவுள் பெயரை அதில் நீக்கிவிட்டுப் பாடும் வண்ணம் அரசாங்க கீதம்' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கடவுளுக்கு எதிராகப் போராடுவதில் இவர்களின் அடுத்தத் திட்டம் என்னவென்பது கடவுளுக்குத்தான் தெரியும்!

மத உணர்வுள்ள இந்துக்களால், இத்தகைய முயற்சிகளைத் தடுக்க இயலாவிட்டாலும்கூட அடுத்து கும்பிட்ட கைகளுடன் வோட்டுக்கு வரும்போது இவற்றை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்வார்களாக!

சென்னை.........

—இப்படி ஒரு கடிதத்தை 'மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு' ஏட்டில் ஒருவர் தீட்டியுள்ளார்.

கடவுளுக்கு எதிராக தி.மு.க. ஆட்சி இருக்கிறது என்று கூறி பூச்சாண்டி காட்டி, வோட்டுக்கு எங்களிடம்தானே வரவேண்டும் என்று பயமுறுத்தமுனையும் பூணூல்களுக்கு நாம்தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், அரண்டவன் கண்ணுக்குத்தான் இருண்டதெல்லாம் பேயாகத் தெரியுமே தவிர. துணிந்தவர் கண்ணுக்கு அல்ல. இப்பூச்சாண்டிக்கு அஞ்சுபவர் அல்ல தி.மு.க. ஆட்சியாளர்.

இன்றுள்ள தி. மு. கழக ஆட்சி அதனால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள சமுதாயப் புரட்சி லட்சியத்தைத்தான் செய்துவருகிறது. இன்னும்வேகமாகபோகவில்லையே என்ற உணர்வு,மனக்குறை பகுத்தறிவாளர்களுக்கும், முற்போக்காளர்கட்கும், சீர்திருத்த வேட்கை மிகுந்த இளைஞர்களுக்கும் இருக்கையில், பார்ப்பனர் ஏதோ பூகம்பம் வந்துவிட்ட நிலையில் அதிர்ச்சி அடைவதுபோல், தங்கள் பேனாவை நர்த்தனமாடச் செய்வது அசல் மாய்மாலம் அல்லாமல், பொய் அழுகைக்கூச்சல் அல்லாமல் வேறு என்ன?

கடவுளுக்கு எதிராகக் கடவுள் ஒழிப்பு முயற்சியில் திமு கழக அரசு இறங்கியிருக்கிறது என்று சொல்வதற்கு பக்தர்கள் கடவுள் நம்பிக்கைக்காரர்கள், ஆஸ்தீக சிரோன்மணிகள் வெட்கப்பட வேண்டாமா?

எல்லாம் வல்ல கடவுளை தி.மு.க. ஆட்சியில் "ஒழித்து"விட முடியும் என்று பக்தர்கள் கருதி அஞ்சி நடுங்குவார்களானால் அதிலிருந்தே கடவுள் யோக்கியதை விளங்குகிறதே!

தி. மு. கழகம் வெறும் ஓட்டு வேட்டைக் கட்சி அல்லவே! அதற்கென ஒரு பாரம்பரியம். லட்சியத் தெளிவு உண்டே!! அவற்றை அடைய வேட்டு முறை, வோட்டு முறை என்ற இரண்டு முறைகளையும் ஆராய்ந்து "ஓட்டும் முறை" ஒன்றினை உருவாக்கி இன்று ஆட்சி பீடத்தில் ஏறியுள்ள கட்சி அல்லவா!

இதற்கு ஓட்டுப் போட்டவர்கள் இதைப்புரிந்து கொள்ளாமலா ஓட்டுப்போட்டார்கள்? ஆட்சிக்கு வந்தவுடன் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கி அல்லது மாற்றி கல்லூரிகள், பள்ளிகள் மருத்துவமனைகளாக்கி விட்டதா? அதுதான் "புரட்சி"!

மற்ற மதத்தவர்களது வழிபாட்டு முறையில், சர்ச்சிலோ, பள்ளி வாசலிலோ, மற்றவர் நுழையக்கூடாது என்று போர்டு தொங்கவிடப்படாத நிலையில், கோயில்களில் மட்டும் இப்படித் தொங்கவிடப்படுவது அநாகரிகம்அல்லவா என்று கேட்டு, இந்துக்கள் அல்லாதவரும் கோயிலுக்குள் செல்லலாம் என்று ஆணை பிறப்பித்தது என்ன தலைகீழ் புரட்சியா? சாமிக்கு வெடிவைக்கும் முயற்சியா?

ஒரே சாதிக்காரனே எதற்கு அர்ச்சகனாக இருக்கவேண்டும்? மற்றவர்களும் மணியடிக்க, பூசை ஆகட்டுமே என்பது "கடவுள் ஒழிப்பு" என்றால், கடவுள் சாதி வளர்ப்புக்காக கண்டுபிடிக்கப்பட்டது என்பதை அவர்கள் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதுதானே பொருள்?

பகுத்தறிவு வாதிகள், கடவுள் நம்பிக்கையற்றவர்கள், பல லட்சக்கணக்கான வோட்டர்கள் இருக்கிறார்கள். தமிழர்கள் இனியும் நன்றி மறந்தவர்களாக, கோடாரிக் காம்புகளாக இருக்கமாட்டார்கள் என்பதை ஆட்சியை அச்சுறுத்தி முனையும் அக்கிரகாரங்கள் அறியும் நாள் தொலைவில் இல்லை.

கடவுளை நம்பாதவர்கள் ஆட்சி உலகில் சரி பகுதிக்குமேல் சுமார் 150 கோடி மக்களுக்குமேல் பல நாடுகளில் நடைபெறுகிறது.

கடவுளுக்கில்லாத கவலை, இவர்களுக்கு இருப்பானேன்? கடவுளை 'கண்டுபிடித்தவன் முட்டாள்' 'பரப்பியவன் அயோக்கியன்' 'வணங்குகிறவன் காட்டுமிராண்டி' என்ற பொன்மொழிக்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டுமா?

எல்லாம்வல்ல சர்வசக்தி சர்வவியாபி என்ற கூற்று உண்மையாக இருப்பின் கடவுளை எப்படி தி.மு.க. அரசு ஒழிக்க முடியும்?

தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுவதுபோல நாம் கடவுளை ஒழிக்க முயற்சிப்பதில்லை. காரணம் இல்லாத ஒன்றை எப்படி ஒருவர் ஒழிக்க முடியும்?

இந்துக்கள் என்று மதவெறியை ஊட்டும் இத்தகைய ஏடுகள் மீது ஆட்சியாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மதக்கலவரங்களுக்கு வெறியூட்டுவதன் மூலம் தூபம் போடுவதால் இவைகளிடம் ஜாமீன் தொகை வாங்கவேண்டும்! ஜாதி ஆணவச் செருக்கில் மிதக்கும் பத்திரிகைகளை விடக்கூடாது. கடிவாளம் அற்ற காட்டுக்குதிரை போன்றதல்ல ஜனநாயகம் என்று காட்ட வேண்டும்! கடவுள் வக்கீல்களுக்கு அப்போதுதான் புத்திவரும்!!

—விடுதலை 21—3—70
தலையங்கத்தில் சில பகுதிகள்,

★

# வெட்கப்பட வேண்டாமா?

— ராஜிமணாளன் —

“இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்” என்ற வள்ளுவரின் குறட்பாவைப் படிக்கின்றபோதும், அதன் ஆழமிக்கப் பொருளின் மீது தேவையான அளவுக்கும் அதிகமாகவே கருத்தூன்றிப் பார்க்கும்போதும் கிடைக்கின்ற தெளிவையும், விளக்கத்தையும்விட, இந்தக்கிழமை தமிழ்நாடு அரசின் ஒரு செயல், இந்தக்குறட்பாவுக்கு, இலக்கியமாய் அமைந்து துல்லியமான விளக்கந்தருவது கண்டு பிரமிக்கவேண்டியிருக்கிறது.

இன்னா செய்ய முந்துவோர், என்னதான் ஏற்றிப் ஏற்றிப் போற்றப்பட்டாலும் தங்கள் இழிந்த இயல்பிலிருந்து ஒரு அணு அளவுகூட மாற்றம் பெறமாட்டார்கள் என்பது திட்டவட்டமாக எழுதிவைக்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பாயிருக்க, நன்னயஞ் செய்து விடுவதன் மூலம், அந்த இழி குணத்தாரை நாணச்செய்ய முடியுமா? கொண்ட நாணம் காரணமாகக் கொண்டிருக்கும் இழிந்த இயல்பில் மாற்றங்கொள்வார்களா என்பதெல்லாம் விவாதத்திற்குரியதாகவே இருக்கட்டும்.

முன்னிலை எப்படியேனும் போகட்டும்; தன்மைக்குக் கூறப்பட்டிருக்கும் இலக்கணமல்லவா அந்தக் குறட்பா!

இன்னா செய்வோர் எப்படியேனும் கெட்டொழியட்டும்; நாணித் திருந்தினாலும் சரி, நகைத்து நைந்து போனாலும் சரி, இன்னா செய்யப்பட்டவன், நன்னயந்தான் செய்யவேண்டும் என்று கூறுகிற பண்பாடு தமிழகத்துக்கன்றி வேறெவருக்குச் சொந்தமாயிருக்க முடியும்?

பிறருடைய வாழ்வைக்கண்டுப் பொங்கிப் பெருமூச் செரிகின்ற பண்பாடும், மாற்றாரது வாழ்வும், வளமும், பற்றியே எண்ணி எண்ணிக் குமைந்துகொண்டிருக்கிற பண்பாடும் எப்படித் தமிழினத்துக்கென்றே ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறதோ, அப்படியே நாண, நன்னயஞ் செய்யும் பண்பாடும் தனிச்சிறப்புடையதுதான்!

நீதி இலக்கணங்கள் தனி மனிதன் என்ற அடிப்படையில் மட்டும் வகுக்கப்பட்டிருந்தாலும், தனி மனிதக் கூட்டுறவு சமுதாயமாகப் பரிணமித்து, சமுதாயத் தலைமையாக அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளப் படும்போது, கூறப்பட்ட இலக்கணங்கள் அரசுக்கும் பொருந்திவிடுகிறது! அந்த வகையிலேயேதான் தமிழக அரசு இந்தக்கிழமை இன்னா செய்தோர் நாணும்படி நன்னயஞ் செய்திருக்கிறது! நாணும் ஆற்றல் இருந்தால் நாணித் திருந்தட்டும்; இன்றேல் நைந்து அழி"ட்டும் என்று அல்ல—தன் கடன், தனது எடுத்துக்காட்டு என்று நன்னயஞ் செய்திருக்கிறது

தமிழர்கள் தம் பெருவேட்கைக்கு மாறாக இந்த நாடு, சென்னை மாநிலமாக இருந்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழ்நாடு என்ற தன்மானப் பெயர் சூட்டப்படும் வரையில் — சந்திக்காததொரு புதுமையை, தமிழகச் சட்டமன்றம் இந்தக் கிழமை சந்தித்திருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள், பணத்திமிங்கிலங்களின் கைக் கூலிகளாக இருந்து நாடாண்ட காலமுதல், சுரண்டல் வர்க்கத்துக்குத் துணைபோகும் சூதுமனம் படைத்தவர்களாக இருந்தவரையில் சந்திக்காத, சந்திக்க முடியாத, சந்திக்கும் வாய்ப்பே அற்றுப்போன ஒரு புதுமை அது!

“இறப்பச் சிறிதுஎண்ணாது இல்லெண்ணாது என்றும்
அறப்பயன் யார்மாட்டும் செய்க...”

என்ற நாலடியின் நல்லுரைக்கு நல்விளக்கமாய் அமைந்திருக்கும் நிகழ்ச்சி அது.

“இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு”

என்ற குறளுக்கு இலக்கியமாகி விட்டிருக்கும் மாபெரும் நிகழ்ச்சியாகத்தான் சித்திரித்துத் தீரவேண்டியிருக்கிறது அதனை!

அன்றாட நிகழ்ச்சி என்றறிவிக்கப் படத்தக்க ஒன்றுக்கு இத்தனைப் பெரிய சிறப்புக் கொடுத்துச் சீர்செய்ய வேண்டிய தன்மையில்தான் அது அமைந்து இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திடம் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை, நாட்டு வாக்காளர் பெருமக்களினால் பெருந்தன்மையுடன் ஒப்படைக்கப்பட்ட பிறகு, முதலமைச்சர் பொறுப்புக்கு வந்தவுடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்த முதல் பட்ஜெட்டின்போது, “இந்த நாட்டு மக்கள் இனியும் புதிய வரிகளைத் தாங்கும் நிலையிலில்லை” என்று உரையாற்றினார்கள். அதற்கொப்ப புதுவரிகள் ஏதும் அறிவிக்கவில்லை. அந்த அடிச்சுவட்டினை ஒட்டியே அடுத்த இருஆண்டுகளும் பட்ஜெட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டன என்றாலும், தேவைகளின் தவிர்க்க முடியாத நிலை காரணமாக, தாங்கும் நிலையிலிருக்கிற, பெரிய பெரிய வணிகர்கள், பணக்காரர்கள் இவர்களுக்கு மட்டும் சில வரிகளின் அளவை உயர்த்தி, தேவைக்கு வழி தேடிக்கொள்ளப்பட்டது. அதுமட்டுமல்லாமல், கடந்த இருபதாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியிலே சாதாரண ஏழை எளியவர்களுக்குக் கிடைக்க முடியாமலிருந்த பல உதவிகளை, சட்ட மூலமும் சம்பிரதாய மூலமும் செயல்படுத்தி சமதர்ம சமுதாய வாழ்வுக்குப் பாதை அமைக்கப்பட்டது.

ஆனால் காங்கிரஸ்காரர்களால் அன்று ஏழை, எளிய மக்களுக்கு அவர்களது அன்றாட உபயோகப் பொருட்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வரி போடப்பட்ட வேளைகளில் எல்லாம் எதிர்க்கட்சியாக இருந்தவைகளில், தி. மு. க. உட்பட, அரசின் அக்கிரமத்தைச் சுட்டிக்காட்டி, இந்த வரி, இந்த ஏழையரின் முதுகை வளைக்கும்; அந்த வரி, அவனது அடிவயிற்றை இறுகப்பிடிக்கும்; அந்தவரி அவனது ஆடையின் அளவைக் குறைக்கும் என்றறெல்லாம் எடுத்துச் சொல்லி, ஆளவந்தவர்களே! ஏழை எளியவர்களை

விதிக்கின்ற வரியை மாற்றுங்கள்; அல்லது அவ்வரியைக் குறையுங்கள் என்றெல்லாம் எத்தனையோமுறை எடுத்துக்காட்டி வந்திருக்கிறது!

சட்டமன்றத்திலேயே கடந்த காலத்தில் தி. மு. க. வினர், வரி உயர்வு காரணமாக வெளிநடப்புச் செய்துமிருக்கிறார்கள்.

என்றாலும் ஏழை எளிய பாட்டாளி மக்கள் பற்றிய அக்கறை அற்றிருந்த நிலை காரணமாக, ஆணவம் மிக்கிருந்த காரணமாக, அந்த எதிர்ப்புகள் அல்ல— வேண்டுகோள்கள் எத்தனை முறை நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

சட்டமன்ற நடைமுறைகளையும், பட்ஜெட்டுகளையும் புரட்டிப்பார்த்தால் மூர்ச்சையாகிவிழும் அளவுக்கு ஏழைப்பாட்டாளி மக்கள் மீது ஏற்றப்பட்ட வரி உயர்வின் அளவு புரியும்.

என்றாலும், அவற்றின் சுமையைக் குறைக்க ஒரே ஒரு முறைகூட அரசு ஒப்புக்கொண்டதாக—கொள்கை அளவில் ஒப்புக் கொண்டதாகக்கூடக் காணமுடியாது!

சென்ற திங்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டின்போது, பணக்காரர்களையும், தாங்கக்கூடிய பெரிய வணிகர்களையுமே பாதிக்கக் கூடியதாக சில வகை ஆடம்பரப் பொருட்கள் மீது வரி உயர்த்தி இருந்தது!

பாவம், ஏழைப் பாட்டாளி வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதியாகச் செயற்பட்டுக் கொண்டு வரும் காங்கிரஸ் இதனை ஏழைகளின் பேரால் எதிர்த்தது. வரி உயர்வை ரத்துச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது!

பணக்காரர்கள் மீது விதிக்கப்படுகின்ற வரியை காங்கிரஸ் தவிர, வேறு எந்தக் கட்சியும் குறைக்க வேண்டும் என்றும் வாதாட முன்வராது! எண்ணத்தில் கூட அப்படிக் கருத்தரிக்காது!

காங்கிரஸ் எதிர்த்தது! எதிர்க்கிறது என்பதற்காக அல்ல—இல் என்னாது அறப்பயன் யார்மட்டும் செய்க என்பதற்காக, இந்தக் கிழமை சில இனங்கள் மீது வரி உயர்வைக் குறைத்து தகவல் அறிவித்திருக்கிறது தி. மு. க. அரசு. தேங்காய் மீது விதிக்கப்படும் வரி, வணிகரையும், மக்களையும் ஒருச்சேரப் பாதிக்கும் என்று எல்லா தரப்பாரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதன் மீதான வரியை அரசு ரத்துச் செய்திருக்கிறது

அதுமட்டுமல்லாமல், மோட்டார் டயர், ஸ்பேர் பார்ட்ஸ் போன்ற சிலவற்றின் மீதும் வரி உயர்வு அளவைக் குறைக்க ஒப்பி, அறிவிப்பும செய்துவிட்டிருக்கிறது. ஒரு மக்கள் அரசு—ஜனநாயகப் பண்பு மிக்க ஒரு அரசு என்பதை இதன் மூலம் உலகுக்கு உணர்த்திக்கொள்ளும் வழி முறைகளின் ஒன்றாக இதனைக் கடைப்பிடித்திருக்கிறது.

இதுதான் தமிழக அரசின் அறிவிப்பு. விதித்த வரியைத் தள்ளுபடி செய்தும், உயர்வைக் குறைத்தும் வெளியிட்டிருக்கும் புதுமை,

ஆண்டுபலவாக ஆண்டவர்கள் ஒருமுறை கூட செய்து காட்டாத புதுமை!

பேரறிஞர் அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் செய்து காட்டியிருக்கும் புதுமை.

காங்கிரஸ்காரர்கள் நாணும்படியாகச் செய்துதிருக்கும் காரியம் இது! ஆண்ட காலத்தில் ஆயிரம் முறை மறுத்தவர்களுக்குக் கேட்டதும் செய்து காட்டியிருக்கும் விந்தை மரபு!

வெட்கப்படவேண்டியவர்கள் காங்கிரஸ்காரர்கள் முக்காடு போட்டுக்கொண்டு மூலையிலேபோய் முடங்க வேண்டும் இதற்காக!

ஆனால் நடந்திருப்பதென்ன? "காங்கிரஸ் கோரிக்கை வெற்றி" என்று தங்கள் இதழ்களிலே பொறித்துப்பார்த்துப் பூரிப்புக் கொள்கிறார்கள்.

> வரிகளைக் குறையுங்கள் என்று கேட்கவே காங்கிரஸ்காரர்களுக்கு யோக்யதை இல்லை. ஏனென்றால் வரி இனம் ஒன்றைக்கூட விட்டு வைக்காதவர்கள் அவர்கள்.
>
> மத்தியிலும், மாநிலத்திலுமாகப் போட்டி போட்டுக்கொண்டு வரிபோட்டுவிட்டதன் காரணமாகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் இனி மேலும் வரியினைத்தாங்கக்கூடிய நிலையில் மக்கள் இல்லை என்று அன்று அறிவிக்கும் நிலைமை ஏற்பட்டது,

வெட்கத்தைவிட்டு விட்டு வரியினைக் குறையுங்கள் என்றார்கள்! குறைக்கப்பட்டதும் மானத்தையும்விட்டு விட்டு,

காங்கிரஸ் கோரிக்கை வெற்றி

என்று செய்தி போட்டுக் கொள்ளுகிறார்கள்.

வெற்றி காங்கிரசுக்கா? கழகத்துக்கா என்பதை மக்கள் அறிவார்கள். காங்கிரஸ்காரர்களைப்போல்மக்கள் மதியுடையவர்கள் அல்லர் என்ற இறுமாப்பு எண்ணம் கழகத்துக்குக் கிடையாது. மக்கள் சக்தி எப்படிப் பட்டது? அந்த மக்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்கள் என்பதனைத் திட்டவட்டமாகக் கழகம் அறிந்திருக்கிறது.

மக்களது தேவைகள் என்ன? அவர்கள் எதனையெல்லாம் விரும்புகிறார்கள் என்றுதான் கடந்த காலத்தில் சட்டமன்றத்திலே கழகம் எதிர்க்கட்சியாக இருந்து எடுத்துச் சொல்லி இருக்கிறது.

இன்று கழகம் ஒன்றைச் செய்கிறது என்றால் அது மக்களுக்காகச் செய்யப்படுவதுதான் என்பதனை உணர வேண்டியவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

வெட்கப்படவேண்டியவர்கள், வீராப்புப்பேசுகிறார்கள்—வெற்றி பெற்றதாக விழாச் செய்து தருகிறார்கள்.

கடிதோச்சி மெல்ல எறியும் கழகத்தின் பண்பாட்டை நினைந்துவிட்டு, உடனே காங்கிரஸ் பற்றியும் நினைத்துப்பார்ப்பது தவறுதான்.

இது குறித்துக் காங்கிரஸ்காரர்கள் வெட்கப்பட மாட்டார்கள். ஏனென்றால் எஞ்சியிருந்த கொஞ்ச நஞ்ச வெட்கத்தையும் ஏற்கெனவே விலைகூறி விட்டார்கள்.

எனவேதான் கழகம் நன்னயஞ் செய்கிறது. காங்கிரஸ்காரர்கள் அன்று மறுத்தார்களே என்பதைக் கருதாது நன்னயஞ் செய்கிறது. ஏனென்றால் இடையே இருப்பவர்கள் மக்கள்! மக்களுக்காகவே கழக அரசு இருக்கிறது.

இதுபுரிகின்றபோது, இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல் என்ற செந்நாப்போதாரின் செவ்விய உரைக்குத் தெரிந்திருந்ததைவிடத் துல்லியமானப் பொருள் விளக்கத்தைப் புரிந்து கொள்ளமுடிகிறது,

★

செந்தாமரை, சென்னை.

சென்னையில், நிலஉச்ச வரம்பை எதிர்த்து விவசாயிகள் ஊர்வலம் நடத்தியது எதனைப் பிரதிபலிக்கிறது?

ஊர்வலம் நடத்தியவர்கள் விவசாயிகள்தானா என்பது பிரச்னைக் குரியதாயினும், பாதிக்கப்பட்டவர்கள், தங்கள் ஆத்திரம் தீர அடித் தொண்டையால்கூட அழுதுத் தீர்ப்பதைத் தடுக்க முடியாதே! நிலவுடைமைக்கு உச்ச வரம்பு கட்டியதுபோல, தொழில்களில் லாபத்துக்கும் உச்ச வரம்பு கட்ட வழி காண வேண்டும்; வருவாய் இனங்கள் அனைத்துக்கும் வரம்பு கட்டி, அதே சமயம் கூலி உயர்வு, விற்பனை விலை முதலானவைகளுக்கும் வரம்பு கண்டால், எல்லாருடைய மனமும் மகிழும். ஆனால் ஒரு மாநில அரசு மட்டுமே தனித்து இதனைச் செய்துவிட முடியாது. மத்திய அரசும் இணைந்துச் செயல்பட வேண்டும். நடக்குமா இது?

து. வசந்தன், கொடைக்கானல்.

பரிசுச் சீட்டுக்களில் மோசடி நடத்தப்படுவது அருவெறுக்கத் தக்கதல்லவா?

மனிதனது அக உணர்வைப் பொருத்த விஷயம் இது. சட்டத்தாலோ, நிர்ப்பந்தத்தாலோ இவற்றையெல்லாம் தடுத்து விட முடியாது. ஆசை அகன்ற மனிதன் எவனாவது இருக்கிறானா? பரிசுத் திட்டமே ஆசையின் அடிப்படை அல்லவா! காசு கொடுத்து பரிசுச் சீட்டு வாங்கியவுடன், அதன் ஓரத்தில் கையெழுத்துப் போட்டு வைத்து விட்டால், ஒருவர் டிக்கெட்டை இன்னொருவர் ஏமாற்றும் போக்கைப் பெரும் பகுதியும் தடுக்க முடியும். கையெழுத்துப் போடத் தெரியாதவர்களும் இருக்கிறார்களே என்ன செய்வது?—என்று கேட்டால், ... டிக்கெட் விற்பனை செய்யும் போதே வியாபாரிகள் வாங்குபவருடைய பெயரைப் பொறித்துக் கொடுத்துவிடலாம் என்று தான் சொல்ல வேண்டியிருக்கும்.

கே. பன்னீர்ச்செல்வம், பண்ருட்டி.

'காஞ்சி'யில் கழகச் செய்திகளுக்குக் கொஞ்சம் இடம் ஒதுக்கக் கூடாதா?




ஒதுக்க முடியாது என்று இதுவரையில் 'காஞ்சி' மறுத்ததில்லையே. ஏப்ரல் 12-ம் நாள் இதழிலிருந்து இதற்கு இடம் ஒதுக்கி விடுகிறோம். சுருக்கமான செய்திகளை அனுப்புங்கள்.

பி. பொன்னுசாமி, கொண்டலாம்பட்டி.

தமிழக அரசின் புதிய பட்ஜெட் பதிவுப் பத்திரங்களுக்கான கட்டணத்தை உயர்த்தி இருப்பதால், இது பணக்காரர்களுக்கு மட்டுமல்லாமல், ஏழைகளையும் பாதிப்பதனால், இதனைப் பழைய முறைப்படியே வசூலிக்க 'காஞ்சி' உதவுமா?

முன்பு ரூ. பத்தாயிரம் வரையில் பதிவுக் கட்டணம் ரூ 56. ஆனால் இப்போது 78 50. கூடுதலாக ரூ. 22 50 தான் செலுத்துகிறார்கள். இவை அடிக்கடி செலுத்தப்படக் கூடியதல்ல. எப்போதோ ஒரே ஒரு முறை மட்டுமே செலுத்துவதாகும். 10000-ரூபாய் செலவு செய்துவிட்டு, 22·50ரூபாய் அதிகம்கொடுக்க வேண்டியிருக்கிறதே என்பது ஒரு பெருங் கவலையா ஐயா! இன்னொன்றையும் நீங்கள் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும். கழக அரசு அமைந்த பின், அந்த அரசிடமிருந்து எல்லாத் தரப்பாரும் உரிமையுடன் கோரிக்கைகளையும், தேவைகளையும் விண்ணப்பிக்கிறார்கள். அவைகள் அனைத்துக்கும் முடிந்தவரையிலாவது ஈடு கொடுக்க நிதி வசதிகள் வேண்டாமா? காங்கிரஸ்காரர்களைப் போல் எல்லாவற்றுக்குமே ஆகட்டும் பார்க்கலாம் என்ற போக்கில் கழக அரசு இருக்க வேண்டுமானால், நாம் நாட்டாளத் தேவையில்லையே!

சந்திரசேகரன், செய்யாறு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் B.D.O. அலுவலகத்தை தேவையற்றது என்றும், கிராமசேவக்குகள் பதவி அவசியமற்றது என்றும் முன்பு குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது அவை செயற்படுத்தப்படுமா?

மாற்று வேலை வாய்ப்புக்களுக்கு வழி வகை தேடிக் கொண்டல்லவா, இதில்செயல்பட வேண்டும்? அத்துடன் இதை இப்போது செயல்படுத்த வேண்டியதில்லை என்று அண்ணா அவர்களாலேயே, ஆட்சித் துறைக்கு வந்த பின் முடிவெடுக்கப் பட்டிருக்கிறதே. தெரியாதா உங்களுக்கு?

## கைத்தறிப் பொருட்காட்சி பேச்சுப் போட்டி

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் திடலில், 29-3-70 முதல் 12-4-70வரையில் நடைபெறும் 16-வது கைத்தறி வாரவிழாவை ஒட்டி சென்னை நகரில் உள்ள கல்லூரி மாணவர், மாணவியர்களுக்காக 5-4-70ம் நாள் காலை 10 மணியளவில், 'Handloom in Modern World' என்ற தலைப்பில் ஆங்கிலப் பேச்சுப் போட்டியும், உயர்நிலைப் பள்ளி மாணவர், மாணவியர்களுக்காக 7-4-70ம் நாளன்று காலை 10 மணி அளவில் கைத்தறியின் பழமையும் புதுமையும் என்ற தலைப்பில் தமிழ்ப் பேச்சுப் போட்டியும் நடைபெறும்.

போட்டியில் கலந்துகொள்வோருக்கு கட்டணம் எதுவுமில்லை. கலந்து கொள்ள விரும்புவோர், தங்கள் கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்ற உரிய தகுதிச் சான்றிதழுடன், 2-4-70ம் நாளைக்குள், "செயலாளர் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிட்., எழும்பூர், சென்னை_8" என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். வெற்றி பெறுபவர்களுக்குத் தகுந்த பரிசுகள் உண்டு.

# அமைதிப் புரட்சிக்கு அப்புறம்?

கம்போடியாவில இந்தக் கிழமை, புரட்சியொன்று நடைபெற்று முடிந்திருக்கிறது. மிகமிக அமைதியாகவே புரட்சி ஏற்பட்டு, ஆட்சி, அதன் அதிபர் நரோதம் சிகநவுக்கிடமிருந்து கைப்பற்றப்பட்டு விட்டது. சிகநவுக் நடுநிலையாளர் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டாலும், அவர் அந்தரங்கத்தில் கம்யூனிச மனப்பான்மையுடையவர் என்றும் அறிவிக்கப்படுகிறது. இதற்கு ஆதாரமாக அவர், சீன ரஷ்யாவுடன் கொண்டிருக்கும் நெருங்கிய தொடர்பு எடுத்துக் காட்டப்படுகிறது. அதிபர் கம்போடியாவைவிட்டு ரஷ்யாவில் தங்கி இருந்த சமயம், பிரதம மந்திரிப் பதவியிலிருந்த ஜெனரல் லோன்நோல் இந்தப் புரட்சியைச் செய்துவிட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. அத்துடன் பார்லிமெண்டின சபாநாயகராகவிருந்த சிரீக்மாடக் என்பவர் சிகநவுக்கின் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். புரட்சிக்கான காரணம், கம்யூனிச ஊடுருவல் மிகுந்துவிட்டதால், அதனை சிகநவுக் தடுக்கத் தவறி விட்டார் என்பதுடன், வருங்காலம், லாவோசைப் போல் கம்போடியாவும் கம்யூனிச ஆதிக்கத்துக்கு ஆட்பட்டுவிடக்கூடிய என்ற அச்சமும்தான் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். புரட்சித்தகவல் வெளிவந்தவுடனேயே, சிகநவுக்கே, தன பதவியை உறுதிப்படுத்திக்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக இப்புரட்சியை வெளியிலிருந்து தூண்டினார் என்று செய்தி தரப்பட்டிருந்தது. ஆனால் இப்போது வந்திருக்கும் செய்திகளின்படி. புரட்சி எதிரொலியால் தலைமறைவாகிவிட்ட அதிபரின் குமாரர் உட்பட, எவரும் கம்போடியாவுக்குள் நுழையக்கூடாது என்று இப்போதைய புரட்சி அரசு உத்திரவிட்டிருப்பதுடன், சிகநவுக்கின் ஆதரவாளர்கள் என்று கருதப்படுவோரும் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அல்லது கடுமையான கண்காணிப்புக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அத்துடன், இப்போது சிகநவுக் கம்யூனிஸ்டு சீனத்தலைநகரான பீகிங்கிலிருந்துகொண்டு, கம்போடியாவை விடுவிக்கும் நோக்கத்துடன் கூடிய அகதி அரசு ஒன்றையும் அமைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. புரட்சி அரசை அமெரிக்கா வெளிப்படையாக ஆதரிப்பதாலும், அதன் பாதுகாப்புக்கும், ஸ்திரத்துக்கும் இராணுவ உதவிகள் வழங்கப்படவேண்டிய நிலையில் அமெரிக்கா இருக்கக்கூடும் என்ற கணிப்பின் காரணமாகவும், சிகநவுக்குக்கு ஒருசேர ரஷ்யாவும், சீனாவும் உதவிகள் தரக்கூடும் என்று நம்பப்படுவதாலும் அமைதிப் புரட்சிக்குப் பிந்தியநிலை, அவ்வளவு அமைதியாக இராது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மயிரிழையில் பிழைத்து விட்டது!

இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நடைமுறைச் சித்தாந்தங்களைக் கண்ட பிறகு அது இடதானாலும், வலதானாலும் வெறுக்கத்தக்கதுதான் என்ற நிலைமைகளுக்கிடையே, கேரளத்தில் அச்சுதமேனன் அவர்களை முதல்வராகக் கொண்ட அமைச்சரவை கவிழ்ந்துவிடக்கூடிய பேரபாயம் ஏற்பட்டுவிட்டது என்ற செய்தி வந்த போது, நல்லவர் நெஞ்சம் துணுக்குறத்தான் செய்தது. காரணம் வலது கம்யூனிஸ்டுகள் மீதுள்ள பற்று அல்ல —இடதுகளின் பயங்கர விளையாட்டுக்களுக்குப்பின், அமைதியாக இருக்கும் ஒரு ஆட்சி, கவிழ்ப்படுகிறதே என் பதற்காக! நாட்டுப்பற்றில் இடதுகளுக்கு இரண்டு சதவீதம் மதிப்பெண் தரமுடியுமானால், வலதுகளுக்கு ஒரு ஐந்து சதவீதம் தரலாம்! இந்தக் கணக்குப்படி இடதைவிட, வலது உயர்வுதானே! அத்துடன், தன் ஆட்சி, பெரும்பான்மை இழந்திருக்கக்கூடும் என்று ஐயுற்ற நிலையில், தன்மீது நம்பிக்கை கோரிய அச்சுதமேனன் அவர்களது பெருந்தன்மையைப் பாராட்டாமலிருக்க முடியாது. இதுபற்றி நம்பூதிரிபாடு தரும் விளக்கத்தைப் புரிந்து கொள்ள முடிந்தாலும், நம்பூதிரிபாடைவிட, அச்சுதமேனன் அவ்வளவு ஆபத்தானவராகத் தெரியவில்லை. நிஜலிங்கப்பாவின் அனுமதியுடன் சிண்டிகேட் காங்கிரஸ்கூட ஆதரவு அளித்ததன் காரணமாகவே அச்சுதமேனன் அவர்களது தலைதப்பி இருந்தாலும். அடுத்தடுத்து அவருக்குப் பேரபாயம் இருந்துகொண்டே இருக்கக் கூடும். பேராபத்தை எதிர்பார்க்கவேண்டியதுதான்!

---

9-ம் பக்கத் தொடர்ச்சி

தவற்றினை எடுத்துக்காட்டி இருக்கிறார். ஆனால் விகடன் தலையங்க ஆசிரியர், "4 கோடி தமிழர்களும் அந்தப் பதினைந்து பேரைத் தேடிக்கொண்டிருந்தார்கள்" என்று கேலி செய்திருப்பது, எந்த அடிப்படை எண்ணத்தில் என்பது நமக்குப் புரிகிறது.

விகடன் நினைப்பதுபோல் அந்த 4 கோடித் தமிழர்களும் காமராசருக்குப் பின்னால் இருக்கவில்லை. கழகத்தின் பின்னே இருக்கிறார்கள் என்பதை விகடன் புரிந்துகொண்டால் நல்லது.

தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு நாடகம் நடத்திவிட்டு, காமராசர் எங்கே போய் ஒளிந்துகொண்டிருக்கிறார் என்றுதான் அந்த 4 கோடித் தமிழர்களும் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை விகடன் உணரச் செய்யவேண்டுமானால், தமிழன். தான தமிழன்தான் என்பதை ஒப்புக்கொள்கின்ற தமிழன் — காட்டிக் கொடுக்கின்ற இனத் துரோகியாகாத தமிழன்

காமராசரைக் கண்டுபிடித்து விகடன்
முன் நிறுத்த முன்வரவேண்டும்!

நிறுத்தப்படும நாளும் தூரத்தில் இல்லை என்பதை விகடன் உணர்ந்து, அப்போது எழுதவேண்டிய தலையங்கத்துக்கு இப்போதே தயாராகிக்கொள்ளட்டும்!

5-ம் பக்கத் தொடர்ச்சி

"ஏன்? அரச நீதிப்படி குற்றந்தானே?"

"மனித நீதி, அரச நீதியை விடப் பெரிது. அதுதான் அரச நீதிகளை அவ்வப்போது மாற்றியும் திருத்தியும் வருவது."

"வெளிப்படையாக எனக்கு உத்திரவு இடுங்கள். நான் வேதனைப்பட்டு இங்கு வந்தேன்."

"கரிமுகா! உனக்கு உத்தரவு தர உன் உள்ளம் ஒன்றே உரிமை பெற்றது. நான், உன் சிந்தனைக்கு வேண்டுமானால் சில தருவேன். உத்தரவு கிடையாது."

"என்ன கூறப்போகிறீர்கள்?"

சங்க நூற்களைப் படித்துக் காட்டப் போகிறேன்" நீயும் பாடங் கேட்டுப் பல நாட்களாகி விட்டன."

"நாட்டு நிலையை எண்ணி நொந்திடும் நேரத்திலே ஏட்டின் கவிதையைக்காட்டினால்...'

"பாடமும் உண்டு. பலனும் உண்டு."





# இந்தியாவுக்கே தலைவர் அண்ணா!

## உள்துறை அமைச்சர் சாவன் புகழாரம்!

அண்ணா மாபெரும் தலைவர். அவர், தமிழகத்தின் தலைவர் மட்டுமல்ல நாட்டின் தலைவர். இந்தியாவின் தலைவர்.

இந்தியா என்பது டெல்லி மட்டுமல்ல. வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய மொத்த எல்லைகளை உள்ளடக்கிய ஒரு நாடு இந்தியா.

இமாசலத்தையும், விந்தியத்தையும், கன்னியாகுமரியையும், வங்காள விரிகுடாக் கடலையும், அரபிக் கடலையும், கங்கை காவிரியையும், பிரம்மபுத்திராவையும் உள்ளடக்கிய நாட்டின் தலைவர் அவர்.

அவர் தமிழ் மக்களின் பெரும் தலைவர் மட்டுமல்ல; தரமிக்கத் தலைவருங்கூட.

வரலாற்றைப் படிக்கும் மாணவன் என்ற முறையில் அண்ணாவின் குணங்களை எண்ணிப் பார்க்கிறேன்; பெருமிதம் அடைகிறேன்.

ஒரு பெருந் தலைவர் ஒரு சில சூழ்நிலை காரணமாக—சில உணர்ச்சிகளின் வெளியீடு காரணமாக ஒரு பகுதியில் தோன்றுவார். அந்த உன்னத உணர்ச்சியும் இலட்சியமும் அவரைப் பெருந் தலைவராக உயர்த்தும்.

மகாத்மா காந்தி ஒரு சாதாரண குஜராத் பகுதியில் தான் தோன்றினார். பேச முடியாதவர்களின் தலைவராக இந்திய சுதந்திரத்தின் கருவியாக அவர் உயர்ந்தார்.

அண்ணா அவர்கள் மனிதர்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்கப் புறப்பட்டார்.

சமுதாயத்தின் ஒரு பகுதியினர் உயர்ந்தவர்கள் ஒரு பகுதியினர் தாழ்ந்தவர்கள் என்ற நிலையை மாற்ற முற்பட்டார்.

தமிழ் நாட்டின் தனித் தன்மை அழிய விடாமல் காப்பாற்ற முயன்றார், இந்திய நாடு ஒரே நாடு எனினும், தங்கள் நாட்டின் தனித் தன்மையைக் காப்பாற்ற முனைவதில் தவறில்லை.

அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் அவர் பிரிவினை வழியில் சென்று விடுவாரோ என்று அஞ்சினர்.

ஆனால் அந்தப் பெரிய மேதை தமிழகத்திற்கு பணியாற்றுவதன் மூலம் இந்தியாவிற்குப் பணியாற்ற முடியும் என்பதை நிரூபித்தார்.

அவரது சிலைகள் நாடு முழுவதும் இன்று நிறுவப் பட்டிருக்கின்றன. அவர் சிலையாக மட்டுமல்ல நம் உள்ளங்களில் என்றென்றும் இடம் பெற்றிருக்கிறார்; அதன் மூலம் நம் உள்ளங்களுக்கு உணர்ச்சி யூட்டுகிறார்.

முதலமைச்சர் கருணாநிதி ஏற்றிருக்கும் பதவிக்கு ஆதரவு தரத் தூண்டுகிறார். இந்தியாவில் பல முன்னேற்றங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் அவற்றினால் எனக்கு முழு திருப்தியில்லை.

வறுமை—பசி—இன்னும் இருந்து வருகிறது. விடுதலை பெற்றும் இந்நிலை போகாத காரணத்தால்தான் நாம் சோஷலிசம் வேண்டும் என்கிறோம்.

உணவு • உடை • கல்வி• சுகாதாரம் • இருப்பிடம் ஆகிய ஐந்து தேவைகளும் மனிதனுக்கு கிடைத்தால் தான், அவன் மகிழ்ச்சி அடைவான் அதுதான் சோஷலிசம்.

முதலமைச்சர் அவர்களுக்கும் எனக்கும் இதே குறிக்கோள்தான்.

நாங்கள் டில்லியில் எதை சாதிக்க வேண்டுமென்று இருக்கிறோமோ, அதையே நீங்கள் இங்கே சாதிக்க விரும்புகிறீர்கள்.

நான் மராட்டியத்திலுள்ள சிறு கிராமத்திலிருந்து வந்தவன் நீங்கள் தமிழ் நாட்டுக் கிராமத்திலிருந்து வந்தவர்கள். நான் டெல்லியில்லை. நாம் அனைவருமே டெல்லிதான்.

முதலமைச்சர் தமிழ் நாட்டிற்கு மட்டும் உரியவரல்ல. அவர் என்ன கருத்தைச் சொல்கிறார் என்பதை இந்தியாவே எதிர்பார்க்கிறது.

அவர் நேற்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாநிலத்திற்கானத் தேவைகளைக் கோரினார். அவருக்கு முழு உரிமை இருக்கிறது. தமிழ்நாடு கஷ்டத்தில் இருக்கும்போது மத்திய அரசு உதவியது. அது போல் நேச உறவு என்றென்றும் இருக்கும்.

நாங்கள் உதவுகிறோம் என்றால், எங்கள் தனிப்பட்ட பணத்திலிருந்து அல்ல. அது இந்தியாவின் பணம். தமிழ்நாட்டுக்கு அதைத் தருகிறோம். ஏனெனில் தமிழ்நாடு இந்தியாவில் இருக்கிறது.

பலாத்காரம் பற்றி முதலமைச்சர் கூறினார். சில கோரிகைகள் வைக்கப்படுகின்றன. அவை அனைத்தையும் நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறது. அதற்காக சிலர் வேறு வழிவகைகளைக் கையாளுகிறார்கள்.

சோசலிசம் நம் கொள்கை என்றாலும், பலாத்காரத்தை பொறுத்தவரை தமிழ்நாட்டைப்போலவே மத்திய அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும்.

வகுப்புவாத சக்திகள் தலையெடுத்து வருகின்றன. நாம் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாம் அனைவரும் இந்திய சகோதரர்கள் என்ற உணர்வுடன் ஈடுபட்டால் இந்தப் பிரச்னை தீரும்.

இன்று என்னைத் தமிழக மக்கள் மிகவும் மகிழ்ச்சி தரத் தக்க முறையில் வாழ்த்தினார்கள். தமிழகம் மிகப் பெரிய கலாச்சாரத்தை, மக்களைக் கொண்ட சமூகம்.

அந்த மக்களின் சுயமரியாதையைக் காக்க ஒரு பெரிய இயக்கத்தை அண்ணா நடத்தினார்.

அண்ணாவின் நினைவிற்கு நான் தலை வணக்கம் செய்கிறேன். அவரது கொள்கைகளுக்கு தலை வணக்கம் செய்கிறேன்.

[புதுக்கோட்டையில், 22—8—70ம் நாளன்று பேரறிஞர் அண்ணா அவர்களது சிலைத் திறப்பு விழா நடைபெற்றது, சிலைத் திறப்புச் செய்த மத்திய உள்துறை அமைச்சர் சவான் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், கழக அரசு பற்றியும் கூறிய கருத்துக்களே இவை.]

29—3—70 முதல்
சென்னை எழும்பூரில் துவங்கும்

16-வது அகில இந்திய கைத்தறி
பொருட்காட்சிக்கு
வருகை தாருங்கள்.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்

உங்கள் உயர்வான விருப்பத்தை
நிறைவேற்றிக் கொள்ளுங்கள்

கைத்தறி துணிகள் உங்களுக்கும்
உங்கள் குடும்பத்திற்கும்,
இல்லத்திற்கும் மதிப்பையும்
அழகையும் தருகின்றன.

10% தள்ளுபடி

இந்த விசேஷ தள்ளுபடி எல்லா
"கோ-ஆப்டெக்ஸ்"
விற்பனை நிலையங்களிலும்,
பிரதம நெசவாளர் கூட்டுறவு
சங்கங்களிலும் கிடைக்கும்.

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
எழும்பூர், சென்னை-8. போன்: 82121 & 82122

எஸ். கே. சம்பந்தன் பி.ஏ.,எம்.பி. தலைவர்